3. தகவல் கோரல்

(அ) உறுப்பினரின் முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழகத்தில் பல தொகுதிகளில் வாக்காளர் பட்டியலிலிருந்து பல வாக்காளர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து..(குறுக்கீடு)

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆஸ்டின், கொஞ்சம் இருங்கள். திரு. ஹேமச்சந்திரன் சொல்லட்டும். பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் eve–teasing காரணமாகப் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கிற கொடுமை, குறிப்பாக பெண் குழந்தைகளுக்குப் பெரிய கொடுமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே மாணவிகள் கல்லூரிகளுக்குப் படிப்பதற்குப் போகாமல் கல்லூரியிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து பல நாட்கள் ஆகின்றன. ஏற்கெனவே இதுபோன்று மேய்க்காமண்டபம் என்ற இடத்தில்கூட மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் தொகுதியில் இரண்டு மாணவர்கள் குண்டு அடிபட்டு அவர்கள் இன்றைக்கு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து பல நாட்கள் ஆகின்றன. அரசு அதுசம்பந்தமாக விளக்கத்தைக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், காவல் துறை மானியக் கோரிக்கையில் இதைப் பற்றி நீங்கள் விரிவாகப் பேசுங்கள் முதலமைச்சர் அவர்கள் உரிய பதிலைச் சொல்வார்கள்.

(ஆ) பேரவையில் இருக்கைகள் ஒதுக்கியது

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உறுப்பினர்களுக்கு இருக்கைகள் ஒதுக்குகிறபோது ஒரு நடைமுறை, மரபு இருக்கிறது. ஒவ்வொரு முறையும் அது பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த முறையும்கூட அரசியல் கட்சிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் வரிசையில் உறுப்பினர்களுக்கு இருக்கைகள்

2001 ஆகஸ்ட் 28] [திரு. ஆஸ்டின்]

ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே, முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதற்குப் பிறகு தமிழ் மாநில காங்கிரஸிற்கும், அதற்குப் பிறகு பாட்டாளி மக்கள் கட்சிக்கும், அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சிக்கும், அதற்குப் பிறகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதற்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதற்குப் பிறகு பாரதீய ஜனதா கட்சிக்கும், 4 உறுப்பினர்களைக் கொண்டிருப்பதால், இருக்கைகள் முறைப்படி ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பாரதீய ஜனதா கட்சிக்கு ஒதுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அடுத்த இருக்கையை ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லத்தீப் அவர்களும், திரு. சந்தானம் அவர்களைப் பொறுத்தவரை, என்னைவிட அவர்கள் வயதிலும் சரி, அனுபவத்திலும் சரி, முதியவர்கள். அதை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், அது வேறு விஷயம். இருக்கைகளை ஒதுக்குகிறபோது அரசியல் கட்சிகளுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் ஒதுக்கியிருக்க வேண்டும். ஒருவேளை வயதில் முதியவர்கள், அரசியல் அனுபவத்தில் மூத்தவர்கள் என்ற காரணத்திற்காக இந்த இருக்கைகளையெல்லாம் எதிர்க்கட்சித் தலைவருடைய இருக்கையையோ அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இருக்கையையோ நாம் ஒதுக்கிவிட முடியாது. ஒருவேளை இரண்டு அரசியல் கட்சிகளில் ஒரே எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இருந்தால் அது சபாநாயகருடைய அதிகாரத்திற்கு உட்பட்டு, அந்த இருக்கைகளை யாருக்கு முதலில் ஒதுக்கிட வேண்டுமென்று முடிவு செய்யலாம். அப்படி இருந்தபோதுகூட...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். பேராசிரியர்கூட இதுபற்றிக் கடிதம் எழுதியிருந்தார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இதுகுறித்து, என்னுடைய அறையிலே நீங்கள் விவாதித்தீர்கள். நானும் உங்களிடம் சொன்னேன், உங்களைவிட திரு. லத்தீப் அவர்கள் வயதிலே மூத்தவர், சிறுபான்மை இனத்தவரின் சார்பாக வந்திருக்கக்கூடியவர் லத்தீப் அவர்கள், சந்தானம் அவர்கள் என்று சொன்னேன். நீங்களும் அதை ஏற்றுக் கொண்டதைப் போலப் போனீர்கள். மறுபடியும் அதை வலியுறுத்துவதாக இருந்தால், அதைப் பற்றி என்னவென்று நான் பரிசீலிக்கிறேன்.